கடலூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை ப.மு.நெ.முஜிபுர் ரகுமான் B.Sc.,

ந.க.எண்4358/2025/எப்1 நாள். 10.03.2026.

பொருள்: மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் - கடலூர் மாநகராட்சி - கடலூர் துறைமுகம் கிராமம், வார்டு எண்.3, பிளாக் எண்.62 நகரளவு எண்.2419/2, 2419/5ல் உள்ள 1.50 ஏக்கர் (6075.00 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசிக்கப்பட்டது - உரிமையாளர்கள் திரு.V.தனசேகர் மற்றும் திரு.P.யுவராஜ் ஆகியோரால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க கோரப்பட்டது - இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1. .உரிமையாளர்கள் திரு.V.தனசேகர் மற்றும் திரு.P.யுவராஜ் ஆகியோரால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கோரிய விண்ணப்பம் நாள்.04.03.2026.

2.நகர் ஊரமைப்புத் துறையால் பரிசீலிக்கப்பட்டு ந.க.எண்.FCJ33KBS/2025/CUD/2025/TCP நாள்.08.04.2025ன்படி SWP/DTCP(CUDD)NO.38/2025 என எண்ணிட்டு வழங்கப்பட்ட தொழிற்நுட்ப அனுமதி உத்தரவு.

3.கடலூர் 2நி இணை சார் பதிவாளர் தான பத்திர பதிவு ஆவண எண். 1885/2025, நாள்.07.04.2025.

4. உதவி செயற்பொறியாளர், கடலூர் மாநகராட்சி அவர்களின் குறிப்பு நாள்.20.01.2026

5.மாமன்றத்தின் முன் அனுமதி நாள்.04.03.2026.

கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர் துறைமுகம் கிராமம், வார்டு எண்.3, பிளாக் எண்.62 நகரளவு எண்.2419/2, 2419/5ல் உள்ள 1.50 ஏக்கர் (6075.00 சதுர மீட்டர்) இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசிக்கப்பட்டது - உரிமையாளர்கள் திரு.V.தனசேகர் மற்றும் திரு.P.யுவராஜ் ஆகியோரால் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க விண்ணப்பித்ததின் பேரில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.FCJ33KBS/2025/CUD/2025/TCP நாள்.08.04.2025ன்படி SWP/DTCP(CUDD)NO.38/2025 தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(1)) துறை நாள்.09.12.2020ன்படியும் TNCDBR-2019 விதி 47(11)ன்படியும் மனைப்பிரிவிற்கு உண்டான அடிப்படை வசதிகளுக்கான மதிப்பீட்டு தொகையை சம்மந்தப்பட்ட உள்ளாட்சியில் மனைப்பிரிவு அபிவிருத்தியாளரால் செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு, தெருவிளக்கு மனுதாரரால் அமைக்கப்பட்டது. மாநகராட்சி மூலம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின் இணைப்பு பெற வைப்புத் தொகை ரூ.1,34,700/- ரசீது எண்.PGCICI833566679 நாள்.12.02.2026 மற்றும் பாதாள சாக்கடை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ரூ.4,30,000/- ரசீது எண்.093/001/01/25-26/0008921 நாள்.09.02.2026 பணம் செலுத்தப்பட்டு, அதன் ரசீது

சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் உத்தேச மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், சிறுபாலங்கள், குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் ஆகியவைகள் உரிமையாளரால் தனது சொந்த செலவில் முறையாக செய்து முடிக்கப்பட்டு, தரச்சான்று சோதனை அறிக்கை கடித எண்.01-03/Civil-Cuddalore-Inspection/2026, நாள்.22.01.2026ல் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி, பண்ருட்டி அமைப்பியல் துறையின் மூலம் சான்று பெறப்பட்டுள்ளது மற்றும் 26 மனைகளுக்கு காலி மனை வரி செலுத்தப்பட்டு அதன் ரசீது நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள உத்தேச மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 6075.00 ச.மீ, (1.50 ஏக்கர்) சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட 1653.94, மனையிடங்களின் மொத்த பரப்பளவு 4421.06 மற்றும் உள்ளாட்சி உபயோக மனை (A) 30.19 சமீ மின் வாரிய உபயோக மனை (B) 29.20 சமீ ஒதுக்கீடு இடங்களை கடலூர் 2நி இணை சார் பதிவாளர் தான பத்திர பதிவு ஆவண எண்.1885/2025, நாள்.07.04.2025ன்படி பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பரப்பளவிற்கு நிகரான வழிகாட்டு மதிப்பீட்டு தொகையினை தங்களால் செலுத்தப்பட்டு. மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கும் பார்வை 5ல் கண்டுள்ளவாறு மாமன்றத்தின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, பார்வை4ல் கண்டுள்ள தங்களின் விண்ணப்பத்தில் கோரியுள்ளபடி தங்களின் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு ஏதுவாக மனைப்பிரிவு அனுமதி கட்டணம் 1 ஏக்கருக்கு ரூ.7500/- வீதம் 1.51 ஏக்கருக்கு ரூ.11,250/- இம்மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அதன் ரசீது நகல் எண் 093/001/01/25-26/0009663, நாள்.04.03.2026 சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை2ல் கண்டுள்ள உதவி இயக்குநர், கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அளிக்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி உத்தரவில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
கடலூர் மாநகராட்சி.

இணைப்பு:- மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

பெறுநர்:-
1.திரு.V.தனசேகர், 2.திரு.K.யுவராஜ்
கதவு எண்.8, தனலட்சுமி நகர், உண்ணாமலைச்செட்டி,
கோண்டூர், கடலூர்.

நகல்:-
1. உதவி இயக்குநர், கடலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
2. உதவி இயக்குநர், (நில அளவை) கடலூர் மாவட்டம்.
3. சார் பதிவாளர், கடலூர் சார் பதிவாளர் அலுவலகம், இணை எண்.1, கடலூர் மாவட்டம்.
4. மாநகராட்சி பொறியாளர் - மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக ஒதுக்கீடு மற்றும் சாலைகள் விவரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்ய.